DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
MCOP NO. 32/2020
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : RW 2 |
| Name | : **குருசாமி** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : **தட்டச்சர்** |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.06.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் பேரில் அவரால் வழங்கப்பட்ட அதிகார கடிதத்தின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் அளித்த அதிகார **கடிதம் சாட்சி சான்றாவணம் 1** ஆகும்.TN 76 W 7674 என்ற ஆட்டோவிற்கான **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை** தாக்கல் செய்கிறேன் அது **சாட்சி சான்றாவணம் 2** ஆகும். TN 76 W 7674 என்ற ஆட்டோவிற்கான **அனுமதி சீட்டு சாட்சி சான்றாவணம் 3** ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஓட்டுநர் உரிமம் எந்த முகவரியில் வாங்கினாரோ அந்த ஊரில் தான் பதியப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுபவர் எந்த ஊரை சேர்ந்தவர் எங்கு வாங்கியிருக்கிறார் என்பதை கண்டுபிடிக்க முடியாது என்றால் சரியல்ல. தற்போதைய சூழ்நிலையில் ஓட்டுநர் உரிமம் நம்பர் இருந்தால் மட்டுமே அவருக்கு இருக்கா இல்லையா என்பதை கடிதத்தின் மூலம் சரிபார்க்க முடியும் என்றால் சரியல்ல.

எந்தவொரு விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சாட்சி சம்மனில் உள்ளதை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம். TN 76 W 7674 என்ற ஆட்டோவிற்கு சாலையில் ஓட்டுவதற்கு அனுமதி சான்று நடப்பில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்திலும் அவருக்கு உரிய அனுமதி இருந்ததா என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனத்தை பார்வையிட்டபோது ஓட்டுநர் உரிமம் காட்டப்படவில்லை என்பதற்காக அந்த வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாக எடுத்துக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.